# உத்தமம் தமிழ் இணைய மாநாட்டில் (2018)

## கட்டுரைகள் வழங்குதற்கான அழைப்பு

உலகத் தமிழ் தகவல் தொழில் நுட்ப மன்றம் (உத்தமம்) அடுத்த தமிழ் இணைய மாநாடு (2018) வரும் ஜுலை 6-8 திகதிகளில் தமிழ்நாடு கோவையில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற உள்ளது. இந்த அறிவிப்பின் மூலம் மாநாட்டின் தொழில் நுட்ப கருத்தரங்குகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் படைக்கத் தமிழ்க் கணினி ஆய்வாளர்களை அன்புடன் அழைக்கின்றோம். சுவிட்சர்லாந்திலுள்ள லோசானின் தேசிய தொழில் நுட்ப பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் முனைவர் கு. கல்யாணசுந்தரம் (உத்தமத்தின் முன்னாள் தலைவர்) மாநாட்டுக் கருத்தரங்கு குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் முன்பு நடைபெற்ற தமிழ் இணைய மாநாடுகளைப்போல் இம்முறையும்

(அ) தமிழ்மொழியில் கணினி பயன்பாடு மற்றும் தொழில்நுட்பம் / IT,

(ஆ) கணினி உதவியுடன் தமிழ் மொழி கற்றல் – கற்பித்தல், மற்றும்

(இ) தமிழ் இணையம் உள்ளடக்கம், தேடு பொறிகள், மின்னூலகங்கள், தமிழ் இணைய வளர்ச்சி, மேலாண்மை போன்ற தலைப்புகளில் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

மாநாட்டின் தொழில்நுட்ப அமர்வுகளில் படைக்க உள்ள கட்டுரைகள் கீழ்க்கண்டவை பற்றி இருக்கலாம் (இப்பட்டியலில் உள்ளவை எடுத்துக்காட்டுகளே):

**தமிழில் கணினி- கணிமை மற்றும் தகவல் தொழில்நுட்பம்**

- திறமைசார் கையடக்கக் கணினிகளில் (ஸ்மார்ட்போன்கள்) தமிழில் உரையாடல்

உரை-பேச்சு- உரை (TTS) நிரலிகள்

- திறமைசான்ற தேடு பொறிகள்
- இயந்திர வழி தமிழ் கற்றல்
- இயந்திர உதவியுடன் மொழிபெயர்ப்பு
- உரை பகுப்பாய்வு மற்றும் தரவுச் சுரங்கங்கள்

- அண்ட்ராய்டு மற்றும் விண்டோஸ் தளங்களில் தமிழ்ப் பயன்பாடுகளுக்கான முக்கியத்துவம்
- திறவுநிலை தமிழ் மென்பொருட்கள் மற்றும் தமிழ்ப்படுத்தல்
- அறிவுநிலை சொல் செயலாக்கம்
- எழுத்துப்பிழை சரிபார்ப்பு
- இலக்கணச் சரிபார்ப்பு
- இயற்கை மொழி பகுப்பாய்வு, (NLP)
- தமிழ்க் கணினிமொழியியல் மற்றும் தரவு மொழியியல் போன்ற தலைப்புகள்

**கணினி உதவியுடன் கற்றல் மற்றும் கற்பித்தல்:** அறிவாக்கச் சாதனங்கள், தொழில்நுட்பம், கையடக்கக் கருவிவழி கற்றல் போன்ற ஆய்வுகள் அதிகரித்துள்ளது தெரிந்ததே! இணைய மன்றங்கள் மற்றும் தொடர்புடைய தலைப்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி தமிழ்க் கற்பித்தல் மற்றும் புதுமையான கற்றல் முறைகள் ஆகியன பற்றியும் கருத்தில் கொள்ளவேண்டும்.

**தமிழ் இணையம்: இணையத்தில் தமிழ் மொழியின் உள்ளடக்கம் மற்றும் விநியோகம்;** வலைப்பதிவுகள், விக்கிபீடியா, பாட்காஸ்டிங், சமூக வலைத்தளங்கள்; தமிழ் மின்நூலகம், மின்வழி ஆவணக் காப்பகம்; தமிழ் இணைக்கப்பட்ட தரவு, சொற்பொருள் வலை, தமிழ், தமிழியல் சார்ந்தவை தொடர்பான தரவு விஞ்ஞானம்; கற்றல் முகாமைத்துவ அமைப்புகள், மெய்நிகர் கற்றல், மற்றும் தொடர்புடைய தலைப்புகள்.

மேலே கூறப்பட்டதைத் தவிர, தமிழ் மொழி சார்ந்த கணினி ஆராய்ச்சிகள் பலவும் வரவேற்கப்படுகின்றன. முந்தைய மாநாடுகளில் படைக்கப்பட்ட கட்டுரைகள் உத்தமத்தின் வலைத்தளத்தில் infitt.org உள்ளன. அவற்றை முன்பார்த்து மீள்பார்வைகளிட்டு முன்னால் செய்த ஆய்வுகளைத் திரும்பச் செய்யாமல் புதிய கண்ணோட்டத்தில் உங்கள் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மாநாட்டில் வழங்குவதற்கான கட்டுரைகளின் சுருக்கங்கள் மாநாட்டுக் கருத்தரங்கக் குழு (CPC) பரிசீலனைக்காக, தமிழ், ஆங்கிலம் அல்லது இருமொழிகளிலும் (தமிழ் மற்றும் ஆங்கிலத்தில், அதிகபட்சம் இரண்டு A4 பக்கங்கள் அளவில் அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். கட்டுரைகளின் சுருக்கம் யுனிகோட் குறியீட்டு முறையைப் பயன்படுத்தி எழுதப்பட வேண்டும். கட்டுரைச் சுருக்கங்கள் cpc2018@infitt.org என்ற முகவரிக்கு 2018 மார்ச் 30 க்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும். கட்டுரைகள் படைக்க விரும்புவோர் கட்டுரையின் சுருக்கங்கள் பின்வரும் மூன்று பிரிவுகளின் கீழ் ஒன்றாக குறிப்பிட்டு கருத்தரங்கக் குழு பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட வேண்டும்:

i) மாநாட்டின் கருத்தரங்க தொழில்நுட்ப அமர்வுகளில் நேரிடையாக (வாய்வழி) வழங்கல்

ii) மாநாடு நடைபெறும் நாட்களில் சுவரொட்டி வழி காட்சிப்படுத்துதல் மற்றும் கலந்துரையாடுதல், மற்றும்

iii) மாநாட்டின் சமூக மைய அமர்வுகளில் சுருக்கமாய் (வாய்மொழி) கட்டுரை வழங்குதல்.

ஆய்வாளர்கள் தங்கள் கட்டுரையைப் பரிசீலனையில் கொள்ளவேண்டிய பிரிவினையைத் தவறாமல் குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கருத்தரங்கக் குழு அத்தகைய விருப்பங்களை மனதில் கொண்டு சரியான தேர்வுமுறையைப் பற்றி முடிவு செய்யும். இம்முறையே கட்டுரைகளைப் பரிசீலனை செய்து தேர்வு செய்தால் தரமான கட்டுரைகள் படைக்க உள்ளோர் அனைவரும் மாநாட்டில் பங்கு கொள்ளமுடியும் என்று கருதுகிறோம்.

ஒரு சுருக்கத்தைச் சமர்ப்பித்தல் என்பது கட்டுரையின் ஒரு ஆசிரியராவது மாநாட்டில் நேரில் கலந்துகொண்டு கட்டுரையைப் படைப்பார்கள் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். மற்றொருவர் மூலமோ அல்லது தொலைதூர மின்வழி மூலமாகவோ கட்டுரை வழங்கல் அனுமதிக்கப்படாது.

2018 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதிக்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரை விவரங்கள் அறிவிக்கப்ப்படும். ஏற்றுக் கொள்ளப்பட்ட கட்டுரைகளின் ஆசிரியர்கள், ஜூன் 1, 2018 ஆம் முன்னர், 4 – 6 பக்க அளவில் கட்டுரையின் முழுமையான படைப்பினை சமர்ப்பிக்க வேண்டும்.

மாநாட்டில் படைக்கப்பட உள்ள கட்டுரைகள் அனைத்தும் அச்சிடப்பட்ட காகித வடிவத்தில் புத்தகமாகவும் மின்வடிவிலும் வெளியிடப்படும். புத்தக வெளியீடு சர்வதேசத்தர வரிசை எண்ணுடன் சென்ற ஆண்டுகளின் கட்டுரைத் தொகுப்புகளைப் போல் வெளியிடப்பட்ட உள்ளது. உலகெங்கிலும் உள்ள எல்லா முக்கிய நூலகங்களும் சர்வதேசத் தரவரிசையுடன் வெளியிடப்படும் தொழில் நுட்ப மாநாட்டு கட்டுரைத் தொகுப்புகளை நூலக அட்டவணைகளில் பயன்படுத்துகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

மாநாட்டு இணையத்தளம் ஊடாக மாநாடு பற்றிய மேலதிக விபரங்கள் விரைவில் வெளியிடப்படும். மாநாடு தொடர்பிலான தகவல்களை பெற **cpc2018@infitt.org** அல்லது ed@infitt.org இற்கோ தொடர்பு கொள்ளவும்.

மாநாட்டு முக நூல் பக்கம்

https://www.facebook.com/events/551185608573566/

மாநாட்டுக்கான இணைய தளம் :

https://www.tamilinternetconference.org/

தமிழ் இணைய மாநாடு 2018,
மாநாட்டுக் குழு
உத்தமம் நிறுவனம்
17.02.2018